திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 24.05.2026

# எளிமையான பக்தி..!

நரசிம்மரைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆசையுடன் ஒரு முனிவர் காட்டில் கடும் தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த வேடன், "ஏன் இப்படி கண் மூடி உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

முனிவர், "நரசிம்ம பிரபுவை நினைத்து தவமிருக்கிறேன்" என்றார். "நரசிம்மம் என்றால் என்ன?" என்று வேடன் கேட்டபோது, "சிங்க முகமும் மனித உடலும் கொண்டது அது" என்று விளக்கினார்.

அதை கேட்ட வேடன், "இன்று மாலைக்குள் அந்த மிருகத்தைப் பிடித்து உங்களிடம் கொண்டு வருகிறேன்" என்று உறுதியளித்தான். உடனே காட்டின் எல்லா பகுதிகளிலும் தேடத் தொடங்கினான். உணவும் தண்ணீரும்கூட அவன் நினைவிற்கு வரவில்லை.

மாலை ஆகிவிட்டதும் நரசிம்மத்தை காண முடியாததால் மனம் உடைந்து, "என் தெய்வமே, அந்த சாமிக்கு நான் கொடுத்த வாக்கை காப்பாற்ற உதவுங்கள்" என்று மனம் உருகி வேண்டினான். அவன் உண்மையான பக்தியால் மனம் இரங்கிய மகாவிஷ்ணு, நரசிம்ம வடிவில் அவன் முன் தோன்றினார்.

மகிழ்ச்சியடைந்த வேடன், காட்டுக்கொடிகளால் நரசிம்மரைக் கட்டி முனிவரிடம் கொண்டு வந்தான். ஆனால், முனிவரின் கண்களுக்கு நரசிம்மம் தெரியவில்லை; கொடிகள் மட்டும் அந்தரத்தில் நிற்பது போலத் தோன்றியது.

அப்போது அசரீரி ஒலி கேட்டது:
"வேடன் முழு நம்பிக்கையுடன் என்னைத் தேடினான். ஆனால், நீ சந்தேகத்துடனும் ஆணவத்துடனும் தவம் செய்தாய். அதனால் உனக்கு நான் தெரியவில்லை."

இதைக் கேட்ட முனிவர் வெட்கப்பட்டு, வேடனின் காலில் விழுந்து வணங்கினார்.

உண்மையான பக்தி என்பது கடும் தவத்தின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டியது அல்ல

எளிமையான.. ஆத்மார்த்தமான.. பக்தியே பூரண இறையருளை நமக்கு பெற்றுத்தரும்.